**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**O.S. No.143/2024**

2026ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 04ஆம் நாள் ----என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. K.அங்கமுத்து (வா.சா.1 ) | தொழில் | : விவசாயம் |
| த/பெ.<br>க/பெ. | : கிருஷ்ணசாமிக்கவுண்டர்<br>: | வயது | : 65 |
| கிராமம் | : மாரப்பக்கவுண்டன்வலசு | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 04.02.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :-</u>

நான் இவ்வழக்கில் வாதி. என்னுடைய சாட்சியத்தை எனது நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | : 30.11.2022 தேதியிட்ட வாதிக்கு, 1ம் பிரதிவாதியின் கணவரும், 2,3 பிரதிவாதிகளின் தந்தையும், 4ம் பிரதிவாதியின் மகனுமான M.ஆனந்தகுமார் எழுதிக்கொடுத்துள்ள கடனுறுதிச் சீட்டு அசல். |
| வா.சா.ஆ.2 | : 16.09.2011 தேதியிட்ட கிரைய பத்திரம் அசல். |
| வா.சா.ஆ.3 | : 12.06.2024 தேதியிட்ட வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு கொடுத்த முன்னறிவிப்பு அலுவலக நகல். |
| வா.சா.ஆ.4 | : 13.06.2024 தேதியிட்ட முன் அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல். |
| வா.சா.ஆ.5 | : 18.06.2024 தேதியிட்ட முன் அறிவிப்பை 4ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை நகல். |
| வா.சா.ஆ.6 | : 21.06.2024 தேதியிட்ட 1 முதல் 3 பிரதிவாதிகள் பக்கம் வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்டுள்ள பதிலறிவிப்பு அசல். |

தாவாப்படி தீர்ப்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை :-</u>** வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

K.
BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2026.02.04 17:37:32 +0530